| வினாத்தாள் எண் Q.P. Booklet Sl.No. |
|---|
| |

பதிவு எண் :
Register Number :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

Tear here

# எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு – 2021
# S.S.L.C MAIN EXAMINATION – 2021
## தாள் / Paper – 02

பாடங்கள் : முதல் மொழி + இரண்டாம் மொழி + மூன்றாம் மொழி / என்.எஸ்.க்யூ.எப்

**Subjects : First Language + Second Language + Third Language / NSQF**

**(CCERF/CCERR/CCEPF/CCEPR/NSR/NSPR)**

காலம் : காலை **10.30** முதல் பகல் **01.30** வரை] **[Time : 10.30 A.M to 01.30 P.M**

மொத்த வினாக்கள் : **40+40+40=120]** **[Total No. of Questions : 40+40+40=120**

மதிப்பெண்கள் : **40+40+40=120]** **[Max.Marks : 40+40+40=120**

## முதல் மொழி / First Language – 10T - தமிழ் / Tamil

## மாணவர்க்கான குறிப்புகள் / Instructions to Students

1. மாணவர்கள் தங்களின் தேர்வு நுழைவுச் சீட்டில் உள்ளவாறு பதிவு எண்களை OMR தாளில் மேலே வலது மூலையில் அதற்கென ஒதுக்கப்பட்ட பதினொரு கட்டங்களில் எழுதுதல் வேண்டும்.

   Write your eleven digits Register Number on the Question Paper as allotted in the admission ticket in the space provided at the top right corner of this front page.

2. இவ்வினாத்தாள் அடித்தாள் மடிந்து முகப்பில் பொருந்தி மூடப்பட்டுள்ளது. மாணவர்கள் தேர்வு வேளையின் போது வினாத்தாளின் வலது புறத்தை கவனமாகப் பிரிக்க வேண்டும். வினாத்தாளின் அனைத்துப் பக்கங்களும் உள்ளனவா என்பதைச் சரி பார்க்க வேண்டும்.

   This question paper has been sealed by reverse jacket. You have to cut on the right side to open the Question Paper at the time of commencement of the examination. Check whether all the pages of the question paper are intact.

3. பாடத்திற்கு ஏற்றவாறு OMR தாள் தனித்தனியாக வழங்கப்படும்.

   O.M.R Sheet will be provided subject wise separately.

வினாத்தாளை திறக்க இங்கே கிழிக்கவும்
TEAR HERE TO OPEN THE QUESTION BOOKLET

இங்கே கிழிக்கவும்

4. தாள் - 2 வினாத்தாள் மூன்று மொழிப் பாடங்களுக்கான தனித்தனி வினாத் தொகுப்புகளைக் கொண்டது.

   This Question Paper consists of three languages and each language has separate question booklet.

5. தாள் - 2 வினாத்தாள் மொத்தம் 120 வினாக்கள் அடங்கியது. ஒவ்வொரு பாடத்திற்கும் 40 வினாக்கள் உண்டு.

   (i) முதல் மொழி - வினா எண் 01முதல் 40 வரை

   (ii) இரண்டாம் மொழி - வினா எண் 41 முதல் 80 வரை

   (iii) மூன்றாம் மொழி / என்.எஸ்.க்யூ.எப் - வினா எண் 81 முதல் 120 வரை

   40 Questions are provided against each subject. This question paper contains 120 questions in all.

   (i) First Language – Question No 01 To 40

   (ii) Second Language – Question No 41 To 80

   (iii) Third Language / NSQF– Question No 81 To 120

6. ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண். அனைத்து வினாக்களுக்கும் விடை தருதல் அவசியம். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும். தவறான விடைகளுக்காக பெற்றுள்ள மதிப்பெண்கள் குறைக்கப்பட மாட்டாது.

   Each question carries one mark. Answering all the questions is compulsory and each correct answer will be awarded one mark. There will be no negative marking for wrong answers.

7. தேர்வின்போது கவனிக்க வேண்டியவை :

   a) வினாத்தாளை கவனமாகப் படித்துப் பார்க்கவும்.

b) வட்டத்தை முழுமையாக நிரப்ப கருப்பு அல்லது நீல நிற மை உடைய பந்துமுனை எழுதுகோலைப் பயன் படுத்தலாம். OMR தாளில் வட்டத்தை நிரப்பும் போது கவனமாக நிரப்ப வேண்டும். நிரப்பிய பின்னர் அதனை மாற்றவோ, சரிசெய்வதோ, வேறு கிறுக்கல்களோ இடம் பெறுதல் கூடாது.

எடுத்துக்காட்டு : 20ஆம் வினாவிற்கான சரியான விடை அதன் வரிசையில் உள்ள A B C D இல் C என்பதாக இருப்பின் கொடுக்கப்பட்டுள்ள நான்கு வட்டங்களில் C எழுத்து உள்ள வட்டத்தை நீலம் அல்லது கருப்பு நிற மை உடைய பந்து முனை எழுது கோலால் நிரப்ப வேண்டும்.

வினா எண் : 20) A B Ⓒ D (இது எடுத்துக்காட்டு மட்டுமே)
○○●○

c) OMR தாளை மடிக்கவோ, கிழிக்கவோ, கசக்கவோ, ஸ்டேபிள் பின் செய்யவோ கூடாது.

During the examination,

a) Read the questions carefully.

b) Completely darken/shade the relevant oval against Question No. in the OMR answer sheet using blue/black ball point pen. Do not try to alter the entry and not to do any stray marks on OMR Sheet.

Example: In the question booklet, if C is the correct answer for Question No.20, then in the OMR sheet, shade the option C using blue/black ball point pen as follows.

Question No. : 20) A B Ⓒ D (This is an example only)
○○●○

c) Do not fold, tear, wrinkle or staple on the OMR Sheet.

8. ஒரு வட்டத்திற்கும் அதிகமான வட்டங்கள் நிரப்பப்பட்டிருந்தால் அவை, தவறான விடைகளாகக் கருதப்படும். அவற்றிற்கு மதிப்பெண் வழங்கப்பட மாட்டாது.

   If more than one oval is shaded for a given question, such answer is treated as wrong and no marks will be given.

9. OMR தாளில் மாணவர் மற்றும் தேர்வாளர் கையொப்பமானது அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இடம் பெற வேண்டும்.

   Student and Room Invigilator should sign in the OMR sheet in the space provided.

10. மாணவர்கள் தேர்வு அறையை விட்டு நீங்குவதற்கு முன்னர் தேர்வாளரிடம் தமது பாட வாரியான OMR தாள்களை ஒப்படைக்க வேண்டும்.

    Candidate should return the subject wise answered OMR sheet to the Room Invigilator before leaving the examination hall.

11. தேர்வின் போது, மாணவர்கள் வேறு குறிப்புகளை வினாத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே எழுதிப் பார்க்க வேண்டும்.

    Rough work can be done in the space provided at the end of the Question Booklet.

12. தேர்வு அறைக்குள் கணிப்பி (கால்குலேட்டர்), கைபேசி போன்ற எத்தகைய மின் அணு சாதனங்களையும் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

    The Calculator, mobiles and any other electronic equipment are not allowed inside the examination hall.

# FIRST LANGUAGE TAMIL

கீழ்க்காணும் முற்றுப்பெறாத தொடர்களுக்கான நான்கு விடைகளுள் சரியான விடைக்கான குறியீட்டைத் தேர்ந்தெடுத்து கொடுக்கப்பட்டுள்ள **OMR** தாளில் கருப்பு அல்லது நீல நிற மை கொண்ட பந்து முனை எழுதுகோலால் குறிப்பிட்ட வட்டத்தை நிரப்புக :- **[40 × 1 = 40]**

**1)** நல்லமுது என்று பாரதிதாசன் குறிப்பிடுவது -

A) கனிச்சாறு B) தீம்பால் திரட்டு

C) இனிமைத் தமிழ் D) தீங்கரும்புச் சொல்

**2)** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று -

A) சிலப்பதிகாரம் B) புறநானூறு

C) மனோன்மணீயம் D) பெரியபுராணம்

**3)** இரவு பகல் அறியாமல் இறைவனை நினைத்து உருகியவர் -

A) மாணிக்கவாசகர் B) கம்பர்

C ) வீரமாமுனிவர் D) சேக்கிழார்

**4)** சொல்லால் செய்யுளை அழகு செய்வது -

A) பொருளணி B) சொல்லணி

C) ஒட்டணி D) சிலேடை

5) பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் நடத்த வந்தவர்கள் -

A) வதுவை மகளிர்
B) புதுமைப் பெண்கள்
C) பாட்டாளிகள்
D) கொல்லாச்சாரியர்

6) தூறு என்பதன் பொருள் -

A) நெருப்பு
B) படை
C) புதர்
D) கயிறு

7) பிட்டுக்காக சொக்கநாதன் சுமந்தது -

A) மண்
B) கல்
C) மரம்
D) நீர்

8) அந்தம் என்ற சொல்லின் எதிர்ச் சொல் -

A) பந்தம்
B) ஆனந்தம்
C) ஆதி
D) அண்டம்

**9)** வேழம் என்ற சொல் உணர்த்தும் இருபொருள் -

A) மூங்கில், ஆழம் B) கரும்பு, யானை

C) கடல், படகு D) உழவு, எருது

**10)** திருப்பெருந்துறையில் உறைபவன் -

A) சிவன் B) திருமால்

C) பிரம்மன் D) இந்திரன்

**11)** நெல் முதிர்ந்தால் இவர் கைக்குப் போய்ச் சேரும் -

A) நெசவு முதலாளிகள் B) தொழில் முதல்வர்

C) நெல் முதலாளிகள் D) கதிர் அறுப்போர்

**12)** விலங்குகளுக்கு மருத்துவமனை நிறுவியவர் -

A) அதியமான் B) அசோகன்

C) செங்குட்டுவன் D) விசயன்

**13)** பாடினி கலங்குமாறு பாணன் கூறிய சொல் -

A) பம்பு சீர் வேழம்
B) வம்பதாம் களபம்
C) கம்ப மா
D) கை மா

**14)** இது ஓசோனுக்கு எமன் -

A) சோடியம் குளோரைட்
B) குளோரோ ஃபுளோரோ கார்பன்
C) ஹைட்ரோ குளோரோ குவின்
D) கார்பன் டை ஆக்சைட்

**15)** ஒட்ட நறுக்கினும் மொக்கை வாலாட்டுவது -

A) எலி
B) சிங்கம்
C) நாய்
D) நரி

**16)** புறத்தினில் கருத்த காந்தி -

A) காமராஜர்
B) அப்துல் கலாம்
C) ஆல்பிரட் நோபல்
D) நெல்சன் மண்டேலா

**17)** மரம் வளர்த்தால் -

A) மழை இல்லை
B) நரகம் இல்லை
C) உணவு இல்லை
D) வீடு இல்லை

**18)** இளைஞனின் நண்பன் -

A) மண்புழு
B) இலட்சியம்
C) நாய்
D) குரங்கு

**19)** வேல் வடித்துக் கொடுத்தல் இவரின் கடன் -

A) தாய்
B) தந்தை
C) கொல்லன்
D) வேந்தன்

**20)** "கீ போர்ட்" - இதன் தமிழாக்கம் -

A) மையச் செயலகம்
B) காட்சித் திரை
C) விசைப் பலகை
D) சுட்டி

21) "இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்" என்ற தொடர் -

A) சேக்கிழார் கூற்று
B) கம்பன் கவித்தொடர்
C) பாரதிதாசன் கூற்று
D) தமிழன்பன் கவித்தொடர்

22) 'பிசி' என்பதன் பொருள் -

A) முதுமொழி
B) பழங்கதை
C) விடுகதை
D) பறவை

23) கன்னடத்தின் ஆதி கவி -

A) அக்கமகா தேவி
B) பசவண்ணன்
C) பம்பன்
D) சர்வக்ஞன்

24) இறுக்கிப் பிடிக்க நினைத்தாலும் இயங்கிக் கொண்டே இருப்பது -

A) காற்று
B) மழை
C) வெள்ளம்
D) ஆறு

**25)** மனத்துக் கண் மாசில்லாமல் இருப்பது -

A) வரம்
B) இன்பம்
C) அறம்
D) மறம்

**26)** கடுகு உள்ளம் கொண்டோர் -

A) நன்னயம் செய்வோர்
B) துணைநலம் சான்றோர்
C) வினைநலம் மிக்கோர்
D) தன்னலம் மிக்கோர்

**27)** கையால் மறைக்க முடியாதது -

A) செவ்வாய்
B) ஞாயிறு
C) கண்
D) காது

**28)** குழந்தைகளைப் பைசாவினால் தரையோடு தரையாக அறை றந்து வைத்தவன்-

A) தண்டல்காரன்
B) அஞ்சல் அலுவலன்
C) கந்து வட்டிக்காரன்
D) தீப்பெட்டி ஆபீஸ்காரன்

**29)** ஆணியில் தொங்குகிற சட்டை போன்று உள்ளீடற்றது -

A) இலட்சிய வாழ்க்கை B) திட்டமிட்ட செயல்

C) இலட்சியமில்லா வாழ்க்கை D) தேடாத செல்வம்

**30)** "அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய் காய்க்கும்" - இதன் விடை

A) எருக்கு B) நெருஞ்சி

C) சிறுமல்லி D) நெய்தல்

**31)** அறத்தான் வருவது -

A) துன்பம் B) வீரம்

C) இன்பம் D) செல்வம்

**32)** மகனைச் சான்றோன் ஆக்குபவன் -

A) பாட்டன் B) மாமன்

C) தந்தை D) தனயர்

**33)** செய்யுளுக்கே உரிய சொல் -

A) திசைச் சொல்
B) திரிசொல்
C) வடசொல்
D) உரிச்சொல்

**34)** இறந்து விட்டாலும் மனிதன் செயலால் வாழ்ந்து கொண்டிருப்பது -

A) இடம்
B) காலம்
C) உயிர்கள்
D) பயன்கள்

**35)** கரை புரண்டோடும் ஆறு இவரை வணங்க வந்தது -

A) அன்னை மரியாள்
B) தூதர் முகமது
C) வேல் முருகன்
D) தானைத் தலைவன்

**36)** தன்னம்பிக்கையைச் சுட்டெரிக்கும் இலக்கியங்களையும் ஏற்பாடுகளையும்-

A) ஏற்றுக்கொள்
B) எழுதிவை
C) செய்து காட்டு
D) இடறி விடு

**37)** பரம்பரைத் தொழிலாளர்கள் கிராமத்தைக் கைவிட்டு நகர்ப்புறம் செல்லக் காரணம் -

A) கூலி கட்டாது B) வேலை அதிகம்

C) சோம்பல் மிகுதி D) வெயில் அதிகம்

**38)** சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள நாம் செய்து கொண்டிருந்தது -

A) வருந்தி இருந்தோம் B) சோம்பி இருந்தோம்

C) தூங்கிக் கிடந்தோம் D) நொந்து வருந்தினோம்

**39)** தலைவி காந்தள் விரலால் பிசைந்தது -

A) வெண்ணெய் B) தயிர்

C) அமுது D) மண்

**40)** 'தேசிய கவி' என்று போற்றப்பட்டவர் -

A) ஈரோடு தமிழன்பன் B) திரு.வி.க.

C) பாவேந்தர் D) சுப்பிரமணிய பாரதியார்

## ಕಚ್ಚಾ ಕಾರ್ಯಕ್ಕಾಗಿ/SPACE FOR ROUGH WORK

## ಕಚ್ಚಾ ಕಾರ್ಯಕ್ಕಾಗಿ/SPACE FOR ROUGH WORK